4

கட்சிக் கடிதம்

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி

தமிழ் மாகாண 6-வது மகாநாடு

(கோவை)

★

முன்னுரை

1960 அக்டோபர் 12 முதல் 16 வரை கோவையில் நடைபெற்ற மாகாண மகாநாடு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது. காரைக்குடி மகாநாடு காட்டிய திசை வழியில், கடந்த $1\frac{1}{4}$ வருடக் கட்சி வேலைகளை மகாநாடு பரிசீலித்தது. தமிழ் நாட்டின் இன்றைய அரசியல் நிலைமையை விவாதித்தது. கட்சியை அடுத்து எதிர்நோக்கும் முக்கிய அரசியல் ஸ்தாபனக் கடமைகளைத் தீர்மான ரூபமாக வரையறுத்துக்கொண்டது. 1962-ம் வருடம் நடைபெறவிருக்கின்ற பொதுத் தேர்தல்களில் தமிழ் நாட்டில் கட்சி தனக்கு உரித்தான பாத்திரத்தை வகிப்பதற்கு மகாநாடு வழி வகுத்துக் கொடுத்தது.

கடந்த வேலையின் பரிசீலனை

சென்ற வருடத்தில் பல இயக்கங்களின் மூலம் தமிழ் மக்களிடம் மேலும் விரிவான அளவுக்குக் கட்சி சென்றிருக்கிறது. முதன் முறையாக நடத்திய விரிவான உணவு இயக்கம், ஜனநாயக சக்திகளைத் திரட்டுவதில் கட்சிக்குப் புதிய அனுபவங்களையும் படிப்பினைகளையும் கொண்டு தந்தது. கேரள ஆதரவு இயக்கம், ஜனநாயகத்திற்காக நாம் உறுதியாகப் போராடுவதைத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டியது. புதுவை ராஜ்யத் தேர்தல் முடிவுகள் கட்சியின் செல்வாக்கை உயர்த்தின. நிலச்சீர்திருத்தப் பிரசாரத்தை முன்னைவிட அதிகமான அளவுக்குச் செய்தது மட்டுமின்றி, சர்க்காரின் உச்ச வரம்பு மசோதாவுக்கு உண்மையான மாற்றுத் திட்டத்தை நமது கட்சிதான் 17 திருத்தங்களின் மூலம் முன்வைக்க முடிந்தது. எண்ணற்ற தொழி

லாளர் போராட்டங்களில் பங்கெடுத்ததன் மூலம் நமது தொழிற்சங்க அஸ்திவாரம் மேலும் உறுதிப்பட்டது. தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கான திட்டத்தை விவரங்களுடன் முதன் முறையாக முன்வைத்தோம். ஆட்சி மொழிப் பிரச்சினை யில் நமது ஆலோசனைகள் ஜனநாயக வாதிகளின் வரவேற்பைப் பெற்றன. நகரசபைகளிலும், பஞ்சாயத்துகளிலும், கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் பல மடங்குஅதிகமான பொறுப்புக்களை நிர் வகித்துள்ளோம். நமது கிளர்ச்சியும் பிரச்சார மும் மேலும் விரிவு பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் அரசியல் வாழ்க்கையில் கட்சியின் பங்கு நாளுக்குநாள் அதிகரித்து வருகிறதென்பதையே சென்ற வருடக் கட்சி நடவடிக்கைகள் மகாநாட்டில் நமக்கு எடுத்துக் காட்டின.

மாகாணத்தில் கட்சியின் தலைமையில் இயங்கும் தொழிற் சங்க வேலைகள் அதிகரித்திருக்கின்றன என்பது மட்டுமல்ல. சில போராட்டங்களிலும் இயக்கங்களிலும் தொழிற் சங்க ஒற்று மையை வளர்த்துக்கொள்ள முடிந்தது. ஆயினும், தொழிலாளி வர்க்கத்திற்கு அரசியல் போதத்தை வளர்ப்பதிலும், தொழிற் சங்க அரங்க வேலைகளின் மூலமும் தொழில் வளர்ச்சியிலும் இதர ஜனப்பகுதிகளின் பிரச்சினைகளிலும் தொழிற் சங்க இயக்கம் வழி காட்டவேண்டியதிலும் காணப்படுகின்ற பலவீனங்களைப் போக் கிக்கொண்டு செயல்பட வேண்டுமென்று மகாநாடு முடிவுசெய்தது.

அதே மாதிரி—மிகக் கேந்திரமான பிரச்சினையான விவசாயப் பிரச்சினையில், கிராமப் புறங்களுக்குக் கவனம் செலுத்தவேண்டிய பார்வை அதிகரித்திருக்கிறது. நிலச்சீர்திருத்தப் பிரச்சாரமும் முன்னைவிட ஸ்தூலமாகவும் அதிகமாகவும் நடந்திருக்கிறது. பாத யாத்திரைகள் இதை நன்கு கோடிட்டுக் காட்டின. ஆயினும் தஞ்சை ஜில்லா நீங்கலாக, விவசாய இயக்கம் இன்னும் திட்டுத் திட்டாகவும் ஆரம்ப கட்டத்திலும்தான் இதர ஜில்லாக்களில் இருக்கிறது. தஞ்சை தவிர மற்ற ஜில்லாக்களில் விவசாயத் தொழிலாளர் இயக்கமும் ஸ்தாபனமும் வளர்க்கப்படாத அபாயம் இன்னும் நீடிக்கிறது. சிறுநிலச் சொந்தக்காரர்களை ஆகர்ஷிப்ப தில் அவர்களுக்குரித்தான பிரச்சினைகளை எடுத்துக்கொள்வதிலும், கிராம அபிவிருத்தித் திட்டங்களில் விவசாய இயக்கம் தனது முன் னணிப் பாத்திரத்தைப் பொருத்தமாக வலியுறுத்துவதிலும், பஞ் சாயத்துகளை ஜனநாயக ரீதியாக இயங்க வைப்பதிலும், நாம் நிறைய முன்னேற்றம் காணவேண்டியுள்ளது. இந்தப் பலவீனங் களைப் போக்கிக்கொண்டு பலம்பொருந்திய மாகாணரீதியான விவசாய இயக்கத்தையும் ஸ்தாபனங்களையும் உறுதிப்படுத்த மாநாடு தீர்மானித்தது.

அரசியல் நிலையும் பொதுத்தேர்தல்களும்

அடுத்த பொதுத்தேர்தல்களுக்கான வேலைகளை எல்லா அரசியல் கட்சிகளும் தீவிரமாக மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றன. இதை மிகப்பெரிய பொறுப்பாகக் கம்யூனிஸ்டுகட்சி கவனித்து இது சம்பந்தமாக எழும் கடமைகளை உறுதியாக நிறைவேற்றவேண்டும்.

காங்கிரஸ் சர்க்காரின் கொள்கைகள் மக்களைத் தொடர்ந்து பாதித்து வருகின்றன. காங்கிரஸ் கட்சி என்னதான் சமதர்மமும் ஜனநாயமும் பேசினாலும், நடைமுறையில் மேல்தட்டு வர்க்கங்களே காங்கிரஸ் ஆட்சியில் பலன்பெற்று வருவதை மக்கள் பார்க்கிறார்கள். விலைவாசிகள் கட்டுப்படுத்தப்படாமல் உயர்ந்து கொண்டே போகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. புதுப்புது வரிகள் தலைதூக்குகின்றன. ஜனநாயக உரிமைகள் தாக்கப்பட்டு வருகின்றன. காங்கிரஸ் கட்சியின் மீது மக்களுக்கு அதிருப்தி நீடிக்கிறது. இது எவ்வகையிலாவது தினசரி வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கிறது.

ஆனால் தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ் எதிர்ப்பனைத்தும் திட்டவட்டமாக ஒரு ஜனநாயகத்திசைவழியில் ஒன்றாகத் திரட்டப்படவில்லை. கம்யூனிஸ்டு கட்சிக்கு செல்வாக்கில்லாத இடங்களில், "சுதந்திரா", "தி. மு. க", முதலிய கட்சிகளினாலோ, இன்ன பிற சிறிய கட்சிகளினாலோ, ஜாதி மத ஸ்தாபனங்களினாலோ, ஜனநாயக ரீதியாகச் சேர்ந்து நிற்கவேண்டிய மக்கள், பல்வேறு வகைகளில் ஆகர்ஷிக்கப்பட்டு, திசை திருப்பிவிடப்பட்டு, பிரிந்து நிற்கின்றனர். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஜனநாயக இயக்கம் ஆகர்ஷிக்கவேண்டிய பல சாதாரண மக்கள் வேறுவழியின்றி இருக்கின்றனர். ஜனநாயக இயக்கம் இவ்வாறு பலவீனப்பட்டு இருப்பது காங்கிரஸ் கட்சிக்கு வரப்பிரசாதமாக இருக்கிறது.

மக்களின் அதிருப்தியை உணரும் காங்கிரஸ் கட்சி, தனது நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கும் தனது கட்சிக்குச் செல்வாக்கை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், தன் கையிலிருக்கும் அரசாங்க யந்திரத்தைத் தாராளமாக உபயோகித்து வருகிறது. எதிர்க்கட்சிகளைச் சிண்டு முடித்து விடுவதற்கும், பிளவு படுத்துவதற்கும், சிர்குலைப்பதற்கும் திட்டமிட்டு வேலை செய்து வருகிறது. ரௌடிகளைக் கொண்டு ஜனநாயக வளர்ச்சியைத் தாக்கவும் முற்பட்டுள்ளது. சாதிப் பாகுபாடுகளையும் பணபலத்தையும் பயன்படுத்துகிறது. தனது சாதனைகளைப் பற்றிய பிரச்சாரத்தையும் எதிர்க்கட்சிகளைத்தூஷிப்பதையும் அதிகப்படுத்தியிருக்கிறது. சலுகைகள்

வழங்க முடிந்த இடங்களின், அவற்றின் மூலமும், ஆதரவு தேடு கிறது. இன்னும் அரசியலில் இழுக்கப்படாத, வளர்ச்சியில் பின் தங்கிய, கிராமப்புறமக்களின் வோட்டுகளைப்பெறுவதில் காங்கிரஸ் கட்சி விசேஷ நம்பிக்கை வைத்துச் செயல்படுகிறது. முதல் கட்சி யாகவும், ஆளும் கட்சியாகவும் இருக்கிற காங்கிரஸ் கட்சியின் முயற்சிகளைக் குறைத்து மதிப்பிடக் கூடாது.

தி. மு. க. தன்னுடைய தனிச் செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்ளும் பிரசார, ஸ்தாபன வேலைகளைத் தீவிரமாகச் செய்து வருகிறது. கடந்த வருடத்தில் அவர்களுடன் நாம் சில பொதுப் பிரச்சினைகளில் சேர்ந்து இயங்க முடிந்தது கம்யூனிஸ்டு எதிர்ப்பை ஓரளவுக்குத் தணித்தது. ஆனால் அவர்கள் பிரிவினை வாதத்தைக் கைவிடாது அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தி வருகிறார்கள். இதைச் சென்ற வருடத்தில் நாம் போதிய அளவுக்கு விமர்சிக்காதது ஜனநாயக இயக்கத்தின்பால் செய்ய வேண்டிய கடமையைச் சரிவரச் செய்யாததாகும் என்று கோவை மகாநாடு அபிப்பிராயப் பட்டது. இந்தக் குறைபாட்டைப் போக்கிக் கொள்வதன் அடிப்படையில்தான் அவர்களுடன் கட்சி ஜனநாயக ஒற்றுமைக்கு வழிகாண முடியும்.

தி. மு. க. வுடன், பிரிவினைவாத கோஷமில்லாத ஒரு ஜன நாயகத் திட்டத்தின் அடிப்படையில் தேர்தல் உடன்பாடு காண் பதற்கான பேச்சு வார்த்தைகளை நமது மத்திய நிர்வாகக் குழுத் தீர்மானப்படி மாகாண கவுன்சில் கவனிக்க வேண்டுமென்ற கருத்தை மகாநாடு ஊர்ஜிதம் செய்தது.

இதே போன்று தமிழரசுக் கழகம், சோஷலிஸ்டு, பி. சோ., குடியரசுக் கட்சிகள் முதலியவற்றுடனும் ஜனநாயகத் தேர்தல் உடன்பாட்டிற்குக் கட்சி முயற்சிக்கவேண்டுமென்பது மகா நாட்டின் முடிவு.

"சுதந்திரா" கட்சி இன்று பிற்போக்கின் உறைவிடமாக விளங்குகிறது. வலதுசாரி கோஷங்களை நிர்த்தாட்சண்யமாக வலி யுறுத்துகிறது. அந்தக் கட்சியுடன் தேர்தல் உடன்பாடென்ற பேச்சுக்கு இடமில்லை. மாறாக, அதன் கோஷங்களின் பிற்போக் குத் தன்மையை தமிழ் மக்களுக்கு நன்கு எடுத்துக் காட்டியாக வேண்டுமென்று மகாநாடு தீர்மானித்தது.

கட்சியின் பொறுப்பு

அடுத்த பொதுத் தேர்தலில் கட்சித் தோழர்கள் கணிசமான அளவுக்கு சட்ட சபைக்கும் பார்லிமெண்டுக்கும் தேர்ந்தெடுக்கப் பட வேண்டிய குறிக்கோளோடு நாம் செயல்பட வேண்டும்.

தொகுதிகள் சம்பந்தமாகவும், தேர்தல் ஏற்பாடுகள், தேர்தல் நிதி வசூல் சம்பந்தமாகவும் உரிய கவனம் செலுத்துவதோடின்றி, அடுத்த ஒரு வருடத்தில் கோவை மகாநாடு வரையறுத்துள்ள முக்கிய அரசியல்-ஸ்தாபனக் கடமைகளையும் இயக்கங்களையும் எவ்வளவு வெற்றிகரமாக நிறைவேற்றி கட்சியை இன்னும் எவ்வளவு அதிகமான அளவுக்கு நாம் பலப்படுத்த முடிகின்றதோ, அந்த அளவுக்குத்தான் நமது தேர்தல் வெற்றிகளுக்கும் உறுதியான உத்தரவாதம் ஏற்படும். பிற அரசியல் கட்சிகளோடு பொருத்தமான தேர்தல் உடன்பாடுகளுக்கு நாம் வருவதையும் நமது கட்சியின் தனிப்பட்ட தொடர்ந்த நடவடிக்கைகளும், கிளர்ச்சியும் பிரசாரமும், ஸ்தாபன பல வளர்ச்சியும்தான் உத்தரவாதப்படுத்தும்.

காங்கிரஸ் கட்சியின் ஜனவிரோதக் கொள்கைகளை எதிர்த்து மக்கள் தீர்ப்புக் கூறும் மாபெரும் அரசியல் போராட்டமாகவே அடுத்த பொதுத் தேர்தல் இருக்கும் தமிழ்நாட்டின் ஜனநாயக சக்திகளைத் திரட்டுவது, பொதுத் தேர்தலையொட்டியும் நமது கட்சி முன்கை எடுத்து நிறைவேற்ற வேண்டிய மிகப் பெரிய கடமையாகும். நாம் முன்வைக்கும் ஜனநாயக ரீதியான ஆலோசனைகளுக்கு ஆதரவாக மக்களின் போராட்டங்களிலும் இயக்கங்களிலும் தமிழ்மக்கள் அணி திரள்வதும், கட்சி அதில் முன்னணிப் பாத்திரம் வகிப்பதும் கட்சியின் தேர்தல் வெற்றிக்கு இன்றியமையாத வேலைகளாகப் பார்க்கவேண்டும்.

ஏற்கனவே காரைக்குடி தீர்மானம் பின்வருமாறு நமது கடமையைச் சென்ற வருடமே சுட்டிக்காட்டியுள்ளதைக் காணலாம் :—

“ தமிழ்நாட்டில் ஜனநாயக சக்திகள் பிரிந்து நிற்பதன் காரணமாகத்தான் காங்கிரஸ் கட்சி இன்னும் ஆட்சிபீடத்தில் நீடிக்க முடிகிறதென்று கம்யூனிஸ்டு கட்சி அபிப்பிராயப்படுகிறது. காங்கிரஸ் கட்சியின் ஜனவிரோதக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதொரு ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு முன்னேறுவதற்கு இயன்றதனைத்தும் செய்வதைத் தனது முதற்கடமையாகக் கருதுகிறது. இந்தக் கடமையை உறுதியாக முன்வந்து நிறைவேற்றுமாறு கம்யூனிஸ்டு கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரையும் இம்மகாநாடு அறைகூவி அழைக்கிறது.”

இந்தக் கடமையை—சென்ற வருட வேலைகளைத் தொடர்ந்து நாம் இன்னும் உறுதியாகவும் தொடர்ந்தும், நிறைவேற்றவேண்டியுள்ளது.

கட்சி ஸ்தாபனம்

பொதுத் தேர்தலுக்கு முன்னதாகவே நமது கடமைகள் நிறைவேறுமென்ற நம்பிக்கையை அளிக்கக் கூடியது நமது கட்சியின் ஸ்தாபன ஒருமைப்பாடும் பலமுமேயாகும். மூன்று தட்டுத் தலைமையின் முதல் அனுபவம் சென்ற வருடம் கட்சிக்குக் கிடைத்தது. இதை இன்னும் அபிவிருத்தியுடன் அமுல்படுத்த மகாநாடு முடிவு செய்தது. கடந்த வருடம் கட்சி அங்கத்தினர்கள் பதிவில் ஏற்பட்ட அனுபவங்களை மனதிற் கொண்டு புதிதாகச் சேர்க்கப்படும் அங்கத்தினர்களுக்குப் பொருத்தமான வேலைகள் கொடுக்கப்படுவதற்கும், அரசியல் கல்வி போதிக்கப்படுவதற்கும், மேல் கமிட்டிகளுடன் கிளைகளுக்கு நெருங்கிய இணைப்பிருப்பதற்கும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று மகாநாடு சுட்டிக் காட்டியது. ஒவ்வொரு கிளையும் தனது இடத்தில் வெகுஜன ஸ்தாபன வேலைகளையும், இதர கட்சி வேலைகளையும், பிரசுர விற்பனை, பத்திரிகை விற்பனை, நிதி வசூல் முதலியவற்றையும் நன்கு கவனித்து நிறைவேற்றுவதை ஜில்லா ஸ்தாபனங்கள் திட்டமிட்டுக் கொடுத்து நிறைவேற்ற உதவவேண்டும் 1960-ம் வருட அங்கத்தினர் பதிவியக்கமும் 3 லட்ச நிதி வசூலும் 1960 டிசம்பர் 31-க்குள் முடித்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும், 1961 ஜனவரி பொங்கல் தினத்திலிருந்து தேர்தல் நிதி துவக்கப்பட வேண்டுமென்றும் முழுநேர ஊழியர்கள் விஷயத்தை பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டுமென்றும் மகாநாடு முடிவு செய்தது. மதுரையிலிருந்து "ஜனசக்தி" பதிப்பு வெளிக்கொண்டு வருவதென்ற மா. க. முடிவை மகாநாடு வரவேற்று ஊர்ஜிதம் செய்தது.

229 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண மகாநாட்டிற்கு 209 பேர் வந்திருந்தனர். அரசியல் ஸ்தாபன அறிக்கைகளின் மீது நடந்த விவாதங்கள் கட்சியின் வளர்ச்சியை எடுத்துக் காட்டின. புதிய மாகாணக் கவுன்சில் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பொதுத் தேர்தலை நோக்கி முன்னேறுவதற்கும், சென்ற வருட வேலைகளைப்பற்றி ஒன்றுபட்ட ஒரு கணிப்புக்கு வருவதற்கும் அடுத்துள்ள கடமைகளைப்பற்றி ஒருமைப்பாட்டுடன் முடிவுகள் எடுப்பதற்கும் மகாநாட்டு நடவடிக்கைகள் பேருதவி புரிந்தன. தமிழ்நாட்டில் கட்சியை எதிர்நோக்கும் மிகப் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு கோவை மாநாட்டிற்கு வந்த பிரதிநிதிகள் நல்ல தன்னம்பிக்கையுடன் சென்றனர்.

முக்கிய அரசியல் - ஸ்தாபனக் கடமைகள்

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் – ஸ்தாபனக் கட

மைகள் பற்றிய தீர்மானம் மிக முக்கியமானது. அடுத்த ஒரு வருடத்திற்குள் நமது கட்சி தமிழ்நாட்டில் மேலும் பலப்படுவதற்கு அந்தத் தீர்மானம் வழிகாட்டுகிறது. ஒவ்வோரு ஜில்லாவிலும் கட்சிக் கிளைகள் அத்தீர்மான அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு முன்னேறுவதற்கு ஜில்லா கவுன்சில் வழிகாட்டுதலுடன் காலங்கடத்தாமல் வேலையிலிறங்கவேண்டும். அந்தத் தீர்மானமும், மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.

காரைக்குடி மகாநாட்டிலிருந்து கோவை மகாநாடு வரை நடைபெற்ற கட்சி நடவடிக்கைகளின் அபிவிருத்திகரமான அம்சங்கள் நமக்கு மேலும் உறுதியாக முன்னேறுவதற்கான ஊக்கத்தைக் கொடுப்பது நிச்சயம். அதே சமயத்தில் நம்மிடம் காணப்படும் பலவீனங்களையும் உறுதியாக அகற்றிக்கொண்டு நாம் செயல்படவேண்டும்.

மக்களின் பிரச்சினைகளைத் தொடர்ந்து எடுத்து அணிதிரட்டி தீர்வு காண்பதற்கான போராட்டங்களை உறுதியாக நடத்துக!

தொழிற்சங்க இயக்கத்தையும் ஸ்தாபனத்தையும் ஒற்றுமையையும் மேலும் விஸ்தரிப்பதுடன், தொழிற்சங்கத்தின் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் பாத்திரத்தை நிறைவேற்றப் பணிபுரிக!

விவசாயத் தொழிலாளர் வாழ்க்கை உயர்வையும் ஸ்தாபனத்தையும் மாகாண முழுவதும் உறுதிப்படுத்துக! விவசாய சங்கத்தையும் பலப்படுத்துக!

வெகுஜன இயக்கங்களில் வரும் ஆதரவாளர்களுக்கு அரசியல் போதமளித்துக் கட்சிக்குக் கொண்டுவருவதற்கு கவனம் செலுத்துக!

கட்சியின் வளர்ச்சியையும் பிரசாரத்தையும் பன்மடங்கு பெருக்குக!

கட்சிப் பத்திரிகை பிரசுரங்களின் விற்பனையை ஒவ்வொரு ஊருக்கும் இன்னும் அதிகமாக எடுத்துச் செல்க!

கட்சிக்கு நிதி திரட்டுவதில் விசேஷ கவனம் தொடர்ந்து செலுத்துக!

இதுவரை செல்லாத புதிய ஜனப்பகுதிகளுக்கும் விரைவில் செல்வதற்குத் திட்டமிட்டு நிறைவேற்றுக!

கட்சியின் அரசியல் தரத்தை உயர்த்த அயராது பாடுபடுக

கட்சி ஸ்தாபனக் கோட்பாடுகளை உறுதியாக கடைப்பிடித்து, கட்சியின் ஒருமைப்பாட்டை இடைவிடாது வளர்த்து, தமிழ் நாட்டில்வெகுஜனக் கட்சியை வன்மைப்படுத்துக !

கோவை மகாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றும் பாதையில் மக்களுக்குத் தலைமைதாங்க முன்வந்து முன்னேறுக !

வாழ்க கம்யூனிஸ்டு கட்சி ! வளர்க ஜனநாயக இயக்கம் !

வாழ்த்துக்கள்,

எம். ஆர். வெங்கட்ராமன்

செயலாளர், தமிழ்நாடு கவுன்சில்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி,

சென்னை,
31-10-60

II. அரசியல் ஸ்தாபனக் கடமைகள்

காரைக்குடியில் நடைபெற்ற 5-வது மகாநாட்டிற்குப் பிறகு உணவு விலைக் குறைப்பு இயக்கமும், நிலச்சீர்திருத்தப் பிரசாரம், கேரள ஆதரவு இயக்கம் போன்ற, மையப்படுத்தப்பட்ட மாகாண ரீதியான இயக்கங்களும் கட்சியின் முன்முயற்சியிலும் தலைமையிலும் நடந்துள்ளன. பிற கட்சியினரை அணுகி ஒத்துழைப்பைப் பெறுவதில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. புதிய அனுபவங்கள் இவற்றின் மூலம் கட்சிக்குக் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி, மொழிப் பிரச்சினை போன்ற முக்கியமான சில பிரச்சினைகளில் கம்யூனிஸ்ட்கட்சி முன்வைத்த சரியான, காரியசாத்தியமான ஆலோசனைகள் பிறரது ஆதரவையும் பெற்றன. இவற்றின் காரணமாகத் தமிழ்நாட்டு அரசியல் வாழ்க்கையில் கட்சியின் பங்கும், பாத்திரமும் அபிவிருத்தி கண்டிருக்கின்றன. கட்சியின் சுயேச்சையான நடவடிக்கைகளும், கூட்டு முயற்சிகளும், நடவடிக்கைகளும் காரைக்குடி மாநாடு தெளிவுபடுத்திக் கொடுத்த ஜனநாயக திசைவழியில் தொடர்ந்து நடைபெறவேண்டும். கட்சிக் கொள்கைகளைத் தொடர்ந்து மக்களுக்கு எடுத்துச் செல்லுவதன்மூலமும், ஜனநாயக ரீதியான வெகுஜன இயக்கங்களும், போராட்டங்களும் உறுதியாகவும் பொறுப்புடனும் நடத்தப்படுவதன் மூலமும், கட்சி ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதன் மூலமும், கட்சிக் கடமைகள் விடாது நிறைவேற்றப்பட வேண்டும். இதை முன்னிட்டு, அன்றாடப் பிரச்சினைகளுக்கான எண்ணற்ற கட்சி வேலைகள் நடைபெறும்போதே, கீழ்க்கண்ட இயக்கங்களுக்கும், இதர கடமைகளுக்கும் விசேஷ முக்கியத்துவமளித்து, மாகாண முழுவதும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள கட்சி உறுப்பினர்களனைவரையும் இம்மாநாடு பணிக்கிறது.

1. உலக சமாதானத்தை உறுதிப்படுத்துக ஏகாதிபத்திய எதிர்ப்பில் மக்களைத் திரட்டுக!

ஆயுதப் பரிகரணமும், ஆசிய-ஆப்பிரிக்க மக்களின் ஐக்கியமும், நாடெங்கும் ஒலித்து எதிரொலிக்கவேண்டிய கோஷங்களாய்விட்டன. யுத்தத்தைத் தவிர்க்க மக்கள் அணி திரள வேண்டும். பஞ்சசீலக் கொள்கையினடிப்படையில் இந்திய-சீன எல்லைப் பிரச்சினை சுமுகமாகத் தீரவேண்டும். ஏகாதிபத்தியவாதிகள் இடைவிடாது செய்துவரும் சதிகளை அம்பலப்படுத்த வேண்டும். சோஷலிச உலகத்தின் சாதனைகளையும், உதவியையும்

எடுத்துரைக்கவேண்டும். காலனி நாடுகளின் விடுதலை இயக்கங்களுக்கு மேலும் ஆதரவு திரட்டவேண்டும். சமாதான இயக்கம் வெற்றி காண்பதற்கு சகல முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

2. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியும்

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியும், அபிவிருத்தித் திட்டங்களும் மக்களுக்குப் பலன் தரத்தக்க முறையில் நடைபெறுவதற்கு நமது கிளர்ச்சியும் நடவடிக்கைகளும் தமிழ் மக்களைத் தொடர்ந்து திரட்டியாக வேண்டும். காங்கிரஸ் சர்க்கார், திட்டத்தை ஜனநாயகப் பாதையில் நிறைவேற்ற மறுக்கிறது, திட்டதிற்குப் பணம் என்ற பெயரால், பெரும் பணக்காரர்களைத் தொடாமல், சாதாரண மக்களின்மீது வரிச்சுமையை அதிகரித்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் குறையவில்லை, அதிகரிக்கிறது. விலைவாசிகள் கட்டுப்படுத்தப் படுவதற்குப் பதிலாக நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. தொழில் அரங்கத்தில் பொதுத்துறையைவிடத் தனியார் துறை வளர்ச்சிக்கே ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்தப் போக்குக்கு முற்றிலும் மாறாக திட்டத்திற்கு நிதி திரட்டுவதிலும், வரி விதிப்பிலும், உழைப்பாளி மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதிலும் ஜனநாயக ரீதியான கொள்கைகளை முன்வைத்து நாம்போராடியாக வேண்டும். தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக நடைபெறும் ஜனநாயகப் போராட்டத்தின் ஜீவன்மிக்க அம்சம் இது.

தொழில் வளர்ச்சித் திட்டங்களில் ஏற்கனவே நாம் முன்வைத்துள்ள ஆலோசனைகளில் பின்வரும் திட்டங்களை முக்கியப்படுத்தி நமது கிளர்ச்சியும் நடவடிக்கைகளும் நடைபெறுவது தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைத் திரட்ட உதவும். இக்கோரிக்கைகள் ஏற்கனவே ராஜ்ய சட்டசபையில் நமது கட்சியின் பிரதிநிதியால் எழுதப்பப்பட்டு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.

1. சேலம் எஃகு ஆலை, நெய்வேலித் திட்ட விஸ்தரிப்பு, 2. சேதுசமுத்திரம்—தூத்துக்குடி துறைமுகத் திட்டம், 3. எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை, 4. அணுசக்தி நிலையம், 5. நீர்ப்பாசன வசதிகள், அண்டை ராஜ்யங்களுடன் பரஸ்பர உடன்பாட்டின் அடிப்படையில் ஆற்றுத் தண்ணீர் உதவி, பிரத்தியேகமாக சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள், அணைகள். கீழூற்று நீர், குழாய்க் கிணறுகள், கன்மாய், குளம், மராமத்து முதலியன.

3. காங்கிரஸ் கட்சியின் ஜனவிரோதப் போக்கை எதிர்த்து

எதிர்க்கட்சிகளைத் தாக்குவதற்கு போலீஸ் அடக்குமுறை கொண்டும், சர்க்கார் நிர்வாக அமைப்பை உபயோகித்தும், சீர்குலைவு நடவடிக்கைகளின் மூலமும், காங்கிரஸ் கட்சி விடாது செயல்பட்டு வருகிறது. கடந்த ஒரு வருட காலத்தில் காங்கிரஸ் கட்சியின் இந்த ஜனவிரோத நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சியினர் வேலை செய்யும் தொழிற்சங்கங்களும் விவசாய சங்கங்களும் திட்டமிட்டுத் தாக்கப்பட்டு வருகின்றன. சர்க்கார் நிறுவிவரும் திட்டக் கமிட்டிகளிலும், இதர கமிட்டிகளிலும் கம்யூனிஸ்ட் கட்சியினரையும் பிற எதிர்க்கட்சியினரையும் வரவொட்டாமல் தடுத்து அவற்றில் காங்கிரஸ் கட்சியினரும் காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பவர்களும் மட்டும் இடம்பெறுவதற்கு சகல சூழ்ச்சிகளும் செய்யப்படுகின்றன. இது மட்டுமின்றி அரசாங்க நிர்வாகத்தில் தலையிட்டு, காங்கிரஸ் கட்சியின் விருப்பத்திற்கும், சுயநலத்திற்கும் இணங்க அரசாங்க இலாகாக்கள் நடப்பதற்காக, நிர்வாக யந்திரத்தின்மீது வரம்புக்கு மீறிய நிர்ப்பந்தமும் காங்கிரஸ் கட்சியினரால் கொண்டுவரப்படுகிறது. மக்களிடம் செல்வாக்கிழந்துவரும் காங்கிரஸ் கட்சி அடுத்துவரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு இத்தகைய ஜனநாயக விரோத முறைகளைக் கையாண்டுவருகிறது. காங்கிரஸ் கட்சியின் இப்போக்கு, தமிழ் நாட்டின் எதிர்காலத்திற்கே ஆபத்து மிகுந்ததாகும். இதை எதிர்த்து முறியடிப்பது தமிழ் மக்களின் கடமை.

காங்கிரஸ் கட்சியின் இந்த ஜனவிரோதப் போக்கை ஸ்தூலமாக மக்கள் முன்பு விடாது எடுத்துக்காட்டியாக வேண்டும். இவற்றைக் கைவிடும்படி சர்க்காரை விடாது வற்புறுத்தியாக வேண்டும். காங்கிரஸ் கட்சியின் நலனுக்காக திட்ட நடவடிக்கைகளோ, திட்ட நிறுவனங்களோ பயன்படுத்தப்பட்டால் அவற்றில் மக்கள் முன்வந்து தலையிட்டு ஜனநாயகத்தைப் பாதுகாத்தாக வேண்டும். எல்லா கட்சிகளும் பிரதிநிதித்துவம் பெறும்முறையில் கமிட்டிகள் அமைக்கப்படக் கிளர்ச்சி செய்யவேண்டும்.

ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்தும் நோக்குடைய இத்தகைய இயக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமின்றி, காங்கிரஸ் கட்சியின் போக்கால் பாதிக்கப்பட்ட எல்லா எதிர்க்கட்சிகளும், சகல ஜனநாயக சக்திகளும், மக்களும் அக்கறையெடுத்து ஆதரவு தருவார்களென்று இம்மாநாடு கருதுகிறது. காங்கிரஸ் கட்சியின் இந்த ஜனவிரோதப் போக்கை எதிர்த்து தமிழ்நாட்டில்

வன்மையானதொரு இயக்கத்தில் மக்களைத் திரட்டி மாற்றம்காண கம்யூனிஸ்ட் கட்சி நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

4. மொழி வளர்ச்சி, கலை, இலக்கியத்துறைக் கடமைகள்

கட்சியின் முழுமையான ஜனநாயக மொழிக் கொள்கையைத் தமிழ் மக்களுக்கு நன்கு விளக்கவேண்டும். கல்லூரிகளிலும் தமிழைப் போதனுமொழியாக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்த வேண்டும். தமிழில் விஞ்ஞான சொற்களைப் பெருக்குவதற்கும், விஞ்ஞான நூல்கள், "டெக்னிகல்" வெளியீடுகள் வெளிவருவதற்கும் முயற்சிகள் எடுக்கவேண்டும்.

காரைக்குடி மாநாடு காட்டிய திசைவழியில் கலை-இலக்கியத் துறைக் கடமைகளை நிறைவேற்றி வரவேண்டும். அதே பொழுதில் அடுத்த ஆறு மாதங்களுக்குள் (1) கலை-இலக்கியத்துறையில் பணிபுரியும் கட்சி அங்கத்தினர்கள், அனுதாபிகளைக்கொண்ட ஒரு சிறப்பு மாநாடு கூட்டி, வேலைகளை நிர்ணயித்து செயல்படுத்த வேண்டும். (2) கிளர்ச்சிப் பிரச்சாரத்திற்கு மிகப் பயன்படும் விதத்தில் சில நாடகங்கள், பாடல்கள் உருவாக்கப்படவேண்டும். (3) இவ்வாண்டில் டால்ஸ்டாய் நூற்றாண்டு விழாவும் அடுத்த ஆண்டில் தாகூர் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்படப்போவதிலும், உலக சமாதான நடவடிக்கைகளிலும், நமது கலைஞர்களும், எழுத்தாளர்களும் முக்கிய பங்கு எடுத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும்.

5. பொதுத் தேர்தல்களும், கட்சியும்.

பொதுத்தேர்தல் சம்பந்தமான நடவடிக்கைகளும், ஏற்பாடுகளும் ஏற்கெனவே கட்சி முடிவு செய்துள்ளபடி, உறுதியாக நிறைவேற்றப்படவேண்டும். அதே சமயத்தில் கட்சி திட்டமிட்டுள்ள பல இயக்கங்களும், நடவடிக்கைகளும் தேர்தல் என்ற காரணத்திற்காக ஒத்திப்போடப்படாமல் நிறைவேற்றப்படவேண்டும். அடுத்த பொதுத் தேர்தல்கள் மிகப்பெரிய அரசியல் போராட்டமாகத் திகழும். அதில் கட்சி தனக்கு உரித்தான பங்கை வகிப்பதற்கு அதைப் பிரதான அரசியல் கடமையாக உணர்ந்து கட்சியின் அரசியல்—ஸ்தாபன—இயக்கக் கடமைகளை நிறைவேற்ற இப்போதிருந்தே செயல்பட்டாக வேண்டும். பொதுத் தேர்தல்களையொட்டி இதர நேசபூர்வமான சக்திகளோடு பொருத்தமான உடன்பாடுகளை உரிய காலத்தில் கவனிப்பதும் இதையொட்டிய முக்கியமானதொரு கடமையாகும்.

6. விலைவாசி உயர்வு எதிர்ப்பியக்கம்

(அ) மக்களின் எல்லாப் பகுதியினரையும் இன்று பயங்கர மாகப் பாதித்துவரும் முக்கியமான பிரச்சினையாக இதைக் கருத வேண்டும். காங்கிரஸ் சர்க்கார் நாடு முழுவதும் அனுசரித்து வரும் கொள்கைகளே இந்த விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும். இதை மாற்றி, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் கொள்கைகள் மேற்கொள்ளப் படுவதற்கு உறுதியாகவும், தொடர்ந்தும், மக்கள் முன்வந்து அணிதிரண்டு போராடுவது இன்றியமையாதது என்பது தெளி வாக்கப்படவேண்டும்.

(ஆ) உணவு விலையைக் கட்டுப்படுத்துவதைப் பிரதானமாக எடுத்துக்கொண்டு தானியக் கொள்முதலின் அவசியத்தை வற் புறுத்தி நியாயமான நிர்ணய விலைக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கவும், உரம், உழுபடைக் கருவிகள் முதலியன, நியாய விலைக்கும், சுலபமாகவும் விவசாயிகளுக்குக் கிடைக்கவும் பாடுபட வேண்டும். சர்க்கார் இந்த நடவடிக்கைகளுக்குப் பொறுப்பேற்று உத்தரவாதமளிப்பதும் வற்புறுத்தப்படவேண்டும்.

(இ) சர்க்கரை, இதர உணவுப் பொருட்கள், துணிமணிகள், மருந்து சாமான்கள், பாட புத்தகங்கள், முதலியவற்றிற்கும் ஸ்தூலமான ஆலோசனைகளை முன்வைத்து விலைக் குறைப்பு நடவடிக்கைகளுக்கு மக்களைத் திரட்டவேண்டும்.

(ஈ) கம்யூனிஸ்ட் கட்சி இவ்வியக்கத்தை உடனே ஏற்று நடத்த திட்டமிடவேண்டும். தொடர்ந்து, நீடித்து நடைபெறக் கூடிய இந்த இயக்கத்திற்கு கட்சியின் தமிழ்நாடு கவுன்சில் அவ் வப்போது உரிய முடிவுகளுடன் வழிகாட்டவேண்டும்.

(உ) சென்ற வருடம் விலைவாசிக் குறைப்புக் கிளர்ச்சியில் அணிசேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம், சோஷலிஸ்ட் கட்சி, மற்றும் இக்குறிக்கோளுக்கு ஆதரவளிக்கக் கூடிய நண்பர்கள், ஜனநாயக சக்திகள்—இவர்களையும் சேர்த்துக் கொண்டு மக்கள் நலனுக்குகந்த நடவடிக்கைகளுக்கு சர்க்காரை நிர்ப்பந்திக்க வல்ல விரிவான மக்கள் அணிவகுப்பு உருவாவதற்கு சகல முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

7. நிலச் சீர்திருத்த இயக்கம்

நிலச் சீர்திருத்தப் பிரசாரத்தின் சிறந்ததொரு நடவடிக்கை யாக பல ஜில்லாக்களில் மேற்கொள்ளப்பட்ட பாதயாத்திரை களும் அண்மையில் நடைபெற்ற மாகாணரீதியான பாதயாத்திரை

களும் விளங்கின. இதைத் தொடர்ந்து சர்க்காரின் உச்சவரம்பு மசோதாவிற்கு கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்துள்ள 17 அம்சத் திருத்தங்கள் மேலும் மக்களுக்கு விளக்கப்படவேண்டும். சட்ட சபை பொறுக்குக் கமிட்டி முன்பும், சட்டசபையிலும் நமது திருத்தங்களை வலியுறுத்தத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கீழ்க்கண்ட அம்சங்கள் பிரத்தியேக கவனம் பெறவேண்டு மென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது:—

(1) உச்சவரம்பு விதிப்பதில் நபருக்கு பதிலாகக் குடும்பம் என்பதை ஏற்கச் செய்வது.

(2) உச்சவரம்புச் சட்டத்தினால் பாதிக்கப்படும் வாரம்—குத்தகைதாரர்களின் நில வெளியேற்ற எதிர்ப் பியக்கம்.

(3) விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினையை மிக முக்கியமான கட்சிக் கடமையாக எடுத்து நிறை வேற்றவேண்டும். ஸ்தல நிலைமையைக் கணக்கி லெடுத்துக்கொண்டு கூலி உயர்வுக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும். இத்துடன் உபரி நில வினி யோகம் குடியிருப்புமனை, தரிசுநில வினியோக கோரிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாய தொழிலாளர் ஸ்தாபனம் கட்டப்படவேண்டும். தஞ்சை ஜில்லா விலிருப்பது மட்டும் போதாது.

(4) 1961-ம் வருடத்தில் நமது நடவடிக்கைகளை யொட்டி, தமிழ்நாடு விவசாய சங்கத்தில் 1½ லட்சம் அங்கத்தி னர்களையும், தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கத் தில் 1½ லட்சம் அங்கத்தினர்களையும் சேர்க்கவேண்டும்.

(5) உச்சவரம்பு மசோதா திருத்தப்படுவதற்கான முயற்சி களில் இதர ஜனநாயக சக்திகளின் ஆதரவையும் பெற முயற்சிகள் எடுத்துவரவேண்டும்.

8. தொழிற்சங்க அரங்கக் கடமைகள்

தொழிற் சங்கங்களைக் கட்டுவதில், தொழிலாளர்களின் வாழ்க்கை உயர்வுக்காகப் போராடும் அதே சமயத்தில் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகவும், இதர ஜனப்பகுதிகளின் வாழ்க்கை நிலையில், அபிவிருத்தி காணவும், சோஷலிச போதம் வளர்ப்பதற் கும், உலகத் தொழிற்சங்க சம்மேளனமும், அகில இந்திய

தொழிற்சங்க காங்கிரசும் வகுக்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் செயல்பட்டு, தமிழ்நாட்டுத் தொழிலாளி வர்க்கம் தனது தொழிற் சங்க இயக்க நடவடிக்கைகளின் மூலமும் இதர ஜனப் பகுதிகளுக்கு வழிகாட்டியாக முன்வர வேண்டும். தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ் பலப்படுத்தப்படவேண்டும். அடுத்த ஒரு வருடத்திற்குள் கட்சித் தோழர்கள் வேலைசெய்யும் சங்கங்களில் அங்கத்தினர் எண்ணிக்கை 2 லட்சமாக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

9. "ஜனசக்தி" மதுரைப் பதிப்பு

1961, மே தினத்தன்று 'ஜனசக்தி'யின் பதிப்பொன்றை மதுரையிலிருந்து வெளியிடுவதென்று தமிழ்நாடு கவுன்சில் செய்துள்ள முடிவை இம்மாநாடு வரவேற்கிறது. தமிழ்நாட்டில் கட்சியின் வாழ்கையில் மிகவும் குறிப்பிடத் தக்க இந்த நிகழ்ச்சியானது மேலும் கட்சியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுமென்று திடமாய் நம்புகிறது. இந்த முடிவு நிறைவேற்றப்பட்டு வெற்றி காண்பதில் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய கடமையை உறுதியாக நிறைவேற்றித் தருவார்களென்று இம்மாநாடு கருதுகிறது. குறித்த காலத்தில் மதுரைப் பதிப்பை வெளிக்கொண்டு வருவதற்கான நிதி வசூலையும் இதர ஏற்பாடுகளையும் முக்கிய கடமையாக கவனித்து நிறைவேற்றுமாறு மாகாண கவுன்சிலை இம்மாநாடு பணிக்கிறது.

10. கட்சி ஸ்தாபனக் கடமைகள்

1. அங்கத்தினர் பதிவு: 1960-ம் வருட அங்கத்தினர் பதிவை டிசம்பர் 31-க்குள் பூர்த்திசெய்யவேண்டும்.

1961-ம் வருடத்தில் ஏற்கனவே இருக்கும் அங்கத்தினர்களை உறுதிப்படுத்திக்கொள்வதோடு நமது நடவடிக்கைகளின் அடிப்படையில் திரளும் ஆதரவாளர்களிலிருந்து புதிய அங்கத்தினர் சேர்ப்பதற்கு உரிய கவனம் செலுத்தவேண்டும். சென்ற வருட பதிவியக்க அனுபவத்தை மனதிற்கொண்டு, உரிய பரிசிலனைக்குப் பிறகே அங்கத்தினர்களை சேர்ப்பதென்றும், அடிப்படை வர்க்கங்களிலிருந்து வரும் "மிலிடெண்டு"களை உறுப்பினராக்குவதில் தயக்கம் காட்டாமலும், அங்கத்தினர்கள் அரசியல் பயிற்சி பெறுவதற்குக் கிளைகள் மூலம் திட்டவட்டமான வேலைகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு பதிவு வேலைகள் நடைபெறவேண்டும்.

2. நிதி வசூல்: 3 லட்ச நிதி வசூலை 1960 டிசம்பர் 31 உடன் முடித்துக்கொள்ளவேண்டும், 1961 பொங்கல் நாளிலிருந்து

தேர்தல் நிதி வசூலைத் துவக்கவேண்டும். மாதாந்திர மாமூல் லெவிபோக, மாதாந்திர தேர்தல் லெவி ஒவ்வொரு கட்சி உறுப்பினரிடமிருந்தும் வசூலிக்கப்படவேண்டும்.

3. அரசியல் கல்வி: ஏற்கனவே தயாரித்துள்ள வகுப்புத் திட்டங்கள் வெளியிடப்பட்டவுடன் ஆசிரியர் பள்ளிகள் நடத்தி முடிக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

4. பிரசுரங்கள்: கொள்கைப் பிரச்சாரத்திற்கும் இயக்க வளர்ச்சிக்கும் உதவும் முறையில் தமிழ் வெளியீடுகளுக்கு ஏற்பாடு செய்தல், பொது விஞ்ஞான நூல்கள், சரித்திரம், கலை சம்பந்தமான வெளியீடுகளுக்கும் ஏற்பாடு செய்தல், மாகாண கவுன்சில் இதை ஒரு முக்கிய கடமையாக விவாதித்துத் திட்டமிட்டுத் தரவேண்டும். பிரசுர விற்பனைக்கு ஜில்லா ஸ்தாபனங்களின் வழிகாட்டுதலுடன் ஒவ்வொரு கிளையும் திட்டமிட்டு விரிவாக விற்கவேண்டும்.

5. மாணவரியக்க வளர்ச்சிக்காக ஜில்லா ஸ்தாபனங்கள் கவனம் செலுத்துதல்.

6. மாதர் இயக்கம்—ஸ்தாபன வளர்ச்சிக்காக ஜில்லா ஸ்தாபனங்கள் கவனம் செலுத்துதல்.

7. தாழ்த்தப்பட்ட மக்கள்—சாதிப் பாகுபாடுகள் :— காரைக்குடி மாநாட்டுத் தீர்மானம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ள வகையில் சாதிப் பாகுபாடுகளைத் தணிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரத்தியேகமாக கவனிக்கவும், ஒவ்வொரு ஜில்லாவிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

II. தீர்மானங்கள்

தியாகிகளுக்கு வணக்கம்

சென்ற மகாநாட்டிற்குப்பின் இந்திய மக்களின் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்குமான போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு இம்மகாநாடு தனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறது

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர்களின் மறைவுக்கு வருத்தம்

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் தலைசிறந்த பிரதிநிதியாக விளங்கியவருமான தோழர் ஹாரிபாலிட்; லெனின் காலத்திலிருந்து சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகவும் ஜெர்மன் தேசத் தொழிலாளி வர்க்கத்தின் உறுதிமிக்க தலைவராகவும் விளங்கிய வில்ஹெல்ம்பெர்க் ஆகியவர்களின் மறை

வுக்கு இம்மகாநாடு தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. இவர்கள் இருவரும் காட்டிய ஒளிமிக்க வழியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தொடர்ந்து சேவை செய்ய இம்மாநாடு உறுதிகொள்ளுகிறது.

காங்கிரசின் மக்கள் விரோதப் போக்கை முறியடிக்க பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்க்கு ஜனநாயக ஒற்றுமையை உருவாக்குவோம் !

காங்கிரஸ் சர்க்கார் பல முற்போக்குக் கொள்கைகளைப் பிரகடனம் செய்த போதிலும் அது கடைப்பிடித்து வரும் பல்வேறு கொள்கைகளின் காரணமாய், அதன் மீது மக்களுக்கு அதிருப்தி வளர்ந்து வருகிறது. திட்டத்தின் பேரால் சாதாரண மக்களின் தலையில் மேலும் மேலும் பல பளுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. விலைவாசி ஏற்றத்தின் விளைவாக சாதாரண மக்களுடைய வாழ்க்கைத்தரம் குறைந்து கொண்டே வருகிறது. மறுபுறத்தில் பெருநிலச்சுவான்தார்களும், வர்த்தகச் சூதாடிகளும், பெரு முதலாளிகளும் மக்களின் செல்வத்தை சூறையாடி பணம் குவிக்க காங்கிரஸ் சர்க்காரின் கொள்கை உதவுகிறது.

இந்தக் கொள்கைகளை எதிர்த்துப் போராடும் உழைப்பாளி மக்களின் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறது. தொழிற் சங்க உரிமைகளும் ஜனநாயக உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. மேலும் சர்க்கார் இயந்திரமும், வசதிகளும், காங்கிரஸ் கட்சியின் குறுகிய நலன்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்கு மிகப்பெரிய மெஜாரிட்டி இருக்கிறதென்ற மமதையால், காங்கிரஸ் சர்க்கார் எதிர்க்கட்சிகளின் நியாயமான விமர்சனங்களையெல்லாம் புறக்கணிக்கிறது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில், கம்யூனிஸ்ட் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், சோஷலிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, தமிழரசுக் கழகம் ஆகிய கட்சிகளுக்கு மிகப் பெரியதோர் பொறுப்பு உண்டு.

கடந்த சில ஆண்டுகளில் விலைவாசிப் பிரச்சினை, நிலச்சீர் திருத்தம், உச்சவரம்பு, தனியார்துறையைக் குறுக்கி பொதுத் துறையை விஸ்தரிப்பது, ஜனநாயக உரிமைகள், தொழிலாளிகளின் கோரிக்கைகள், ராஜ்யங்களுக்கு அதிக அதிகாரங்கள் ஆகிய பல ஸ்தூலமான பிரச்சினைகளில் கம்யூனிஸ்ட் கட்சியும், தி. மு. க.வும் மேற்கூறிய இதர கட்சிகளும் சட்டசபையிலும், வெளியிலும் ஒன்றுசேர்ந்து நின்றிருக்கின்றன.

தி. மு. க.வின் நாட்டுப் பிரிவினை லட்சியத்தில் அதற்கும் இதர கட்சிகளுக்கும் உடன்பாடில்லை என்பது தெரிந்ததே. ஆயினும், இந்த லட்சியத்தில் உள்ள வேற்றுமை, மேற்கூறிய பிரச்சினைகளில் ஒன்றுசேர்ந்து இயக்கங்களை நடத்துவதற்கு குறுக்கே நிற்கவில்லை. இவ்வாறு சேர்ந்து இயக்கங்களை நடத்திய தனுல் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டன என்பது நடைமுடை அனுபவம்.

அடுத்து வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் சர்க்காரின் மேற்கூறிய கொள்கைகளும், அதன் பாரபட்சமான நிர்வாகமும், தமிழ்நாட்டு மக்களுக்கு முன்புள்ள பிரதான பிரச்சினைகளாகுமென்று இம்மகாநாடு கருதுகிறது.

எனவே, கம்யூனிஸ்ட் கட்சி, தி. மு. க. மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள சோஷலிஸ்ட் கட்சி, பி. சோ., தமிழரசுக் கழகம், குடியரசுக் கட்சி ஆகிய கட்சிகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு உடனடியான, ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்ருகச் சேர்ந்து தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்கு தி. மு. க. வின் நாட்டுப் பிரிவினை லட்சியம் தடையாக இருக்கும் நிலை உண்டாக்கப்படக்கூடாது என்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது. நாட்டுப் பிரிவினை லட்சியத்தை தி. மு. க. கைவிட்டுவிட வேண்டும் என்பது இதன் பொருளல்ல. தேர்தலில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் பொதுவான திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுபடவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.

இத்தகையதோர் கூட்டணியை உருவாக்கினுல்தான் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் மக்கள் அனுபவிக்கும் சொல்லொணுத் துயரங்களும், கஷ்டங்களும் குறைவதற்கு வழியுண்டு என்ற உறுதியான நம்பிக்கை தமிழ் மக்களுக்கு ஏற்படும். இந்த நம்பிக்கை அடுத்துவரும் தேர்தலுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் ஜனநாயக இயக்க வளர்ச்சிக்கே அத்தியாவசியமானது என்பது இம்மகாநாட்டின் திடமான கருத்து.

இத்தகையதோர் கூட்டணி உருவாக்கப்பட வேண்டும் என்ற இந்த யோசனையை ஆழ்ந்து பரிசீலிக்குமாறு இம்மகாநாடு தி.மு.க. சோஷலிஸ்ட் கட்சி, பி. சோ. கட்சி, தமிழரசுக் கழகம், குடியரசுக் கட்சி ஆகிய கட்சிகளை வேண்டுகிறது.

காங்கிரஸ் சர்க்காரின் அதிகார துஷ்பிரயோகம் ஜனநாயக விரோதச் செயல்களுக்கு கண்டனம்

தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ் சர்க்கார் ஜனநாயகக் கோட்பாடுகளைப் புறக்கணித்து, சர்க்கார் இயந்திரத்தையும், அதிகாரி

களையும், மக்கள் வரிப்பணத்தையும் தனது சொந்தக் கட்சி நலன்களுக்காகவும், எதிர்க் கட்சிகளை அடக்கி ஒடுக்குவதற்காகவும் பயன்படுத்தி வருகிறது.

1. எதிர்க்கட்சிகளும், அவைகள் நடத்தும் இயக்கங்களும் வளரவொட்டாமல் தடுப்பதற்காக போலீஸ் எல்லாவகையிலும் பயன்படுத்தப்படுகிறது. இந்த இயக்கங்களில் ஈடுபட்டுள்ளவர் களின்மீது ஜாமீன் வழக்குகள் தொடரப்பட்டு, மாதக்கணக்கிலும் வருடக்கணக்கிலும் அவர்கள் தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுகின் றனர். இத்தகைய வழக்குகள் பெரும்பாலும் கோர்ட்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சிக்காரர்கள், காங்கிரஸ்காரர்கள் மீது கொடுக்கும் புகார்கள் விசாரிக்கப்படுவதில்லை. ஆனால், காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் மீது எவ்வித ஆதாரமும் இல்லாத புகார் களைக் கொடுத்தாலும், எதிர்க்கட்சியினர் கைதுசெய்யப்படுகின் றனர்.

எதிர்க்கட்சிகள் பிரச்சாரம் செய்வதற்கு பல்வேறு தடை களும், நிர்ப்பந்தங்களும் விதிக்கப்படுகின்றன. போலீஸின் அன்றாட நடவடிக்கைகளில் காங்கிரஸ்காரர்கள் தலையிடுவதை காங்கிரஸ் சர்க்கார் அனுமதிக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர்கள், ஸ்தல போலீஸ் அதிகாரியின் மீது புகார் செய்ததற்காக, ஒரு ஜில்லா போலீஸ் தலைமை அதிகாரி, அந்த புகாரை விசாரிக்காமலேயே, புகார் செய்தவர்கள் மீது வழக்குத் தொடர்ந்தார்.

செஷன்ஸ் நீதிபதி அந்த போலீஸ் தலைமை அதிகாரியின் நடத்தையை வன்மையாகக் கண்டித்த பிறகும், பொதுஜன ஊழியரை இவ்வளவு தொந்தரவுக்குள்ளாக்கிய அந்த அதிகாரி யின் மீது இதுவரை அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

மேலும், பலவிடங்களில் எதிர்க்கட்சி ஊழியர்கள்மீது ஏவி விடப்படும் குண்டர்களைப் பாதுகாக்கும் கருவியாக போலீஸ் செய லாற்றி வருகிறது.

2. காங்கிரஸ் கட்சியைச் சேராதவர்கள் நடத்தும் தொழிற் சங்கங்களுக்கு விரோதமாகவும், காங்கிரஸ்காரர்கள் நடத்தும் தொழிற்சங்கங்களை ஊக்குவித்து வளர்க்கும் முறையிலும் சர்க்கா ரின் தொழிலாளர் இலாகா பயன் படுத்தப்படுகிறது.

3. சர்க்கார் உத்தியோகங்களுக்கு அபேட்சகர்களைப்பொறுக் கும் ஸ்தாபனமாகிய ராஜ்ய பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் காங்கிரஸ்

கட்சியினால் மேல் சட்டசபை அங்கத்தினராய் தேர்ந்தெடுக்கப் பட்டு உபதலைவராயிருந்த ஒரு கட்சி நபரும் சென்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நின்று தோற்ற ஒரு நபரும் அங் கத்தினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

பப்ளிக் பிராசிகியூட்டர்கள் உதவி பப்ளிக் பிராசிகியூட்டர் கள் போன்ற நீதி இலாகா உத்தியோகங்கள் காங்கிரஸ்காரர் களுக்கோ அல்லது அவர்களின் உறவினர்களுக்கோ அளிக்கப்படு கின்றன.

4. ஜில்லா கலெக்டர்கள் உட்பட சர்க்கார் அதிகாரிகள் பல ரும் காங்கிரஸ்காரர்களின் விருப்பு, வெறுப்புக்கேற்ப மாற்றப்படு கின்றனர்.

5. கல்லூரிகள், பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் முதலியவற்றின் தேர்வு குழுக்களும், ஹரிஜன நலபோர்டு, சமூகநல போர்டு போன்றவையெல்லாம் காங்கிரஸ்கார்களின் ஏகபோக உரிமையாக இருக்கின்றன. இதில் காங்கிரஸ் அல்லாதாருக்கு இடம் அளிக் கப்படுவதேயில்லை.

6. பஸ் பர்மிட்டுகள், காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள், தேர்த லில் தோற்ற காங்கிரஸ்காரர்கள், மற்றும் காங்கிரஸ் ஸ்தாபனத்தி லுள்ள முக்கிய நிர்வாகஸ்தர்கள் ஆகியோருக்கு சட்டதிட்டங்களை யெல்லாம் புறக்கணித்து அளிக்கப்படுகின்றன. காண்ட்ராக்ட்டு கள், லைசென்சுகள் வழங்குவதெல்லாம் காங்கிரஸ் கட்சியை பலப் படுத்துவதற்கும், கட்சிக்கு நிதிதேடுவதற்குமான ஆயுதங்களாக உபயோகிக்கப் படுகின்றன.

காங்கிரசல்லாத கட்சியினர் நடத்தும் கூட்டுறவு ஸ்தாபனங் கள், நகரசபைகள், பஞ்சாயத்துகள் ஆகியவற்றில் காங்கிரஸ்காரர் களின் நலன்களுக்காக சர்க்கார் அனுவசியமாக தலையிட்டு தொந்த ரவு செய்கிறது.

எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தேர்தெடுக்கப்பட்டுள்ள தொகுதிகளுக்கு அபிவிருத்தித் திட்டங்களை ஏற்றுக் கொள்வதி லும், அவைகளுக்கு பணம் ஒதுக்கப்படுவதிலும் பாரபட்சம் காட் டப்படுகிறது.

மக்களின் வரிப்பணத்திலிருந்து கிடைக்கும் சர்க்கார் நிதி, காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கும் பத்திரிகைகளுக்கு பெரும் அளவு விளம்பரங்கள் மூலம் கொடுக்கப்படுகிறது.

மேற்கூறிய வகையிலும் இன்னும் இதுபோன்ற பலவகைகளி லும் காங்கிரஸ் சர்க்கார் ஜனநாயகக் கோட்பாடுகளையெல்லாம் புறக்கணித்து வருவதால் நிர்வாகத்திடமிருந்து நீதியையும், நேர்

மையையும் எதிர்பார்க்க முடிவதில்லை. நிர்வாகம் பூராவும் காங்கிரஸ் கட்சியின் நலனுக்காக இயங்கும் ஒரு கருவியாக இருந்து வருகிறது.

இந்த நிலை நீடித்தால் தமிழ்நாட்டின் பொதுவாழ்வுக்கும், ஜனநாயக வளர்ச்சிக்கும் ஆபத்து வளருவதுடன், எதேச்சாதிகாரப்போக்கு மேலும் வளரும் என்பது உறுதி.

எனவே, இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், பாரபட்சமற்ற நிர்வாகத்திற்காகவும் மக்களைத் திரட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் ஒன்று சேருமாறு இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

விடுதலைபெற்ற புதிய ஆப்பிரிக்க நாடுகளுக்கு வரவேற்பு நவம்பர் 1உ லிருந்து 7உ வரை ஆயுத ஒழிப்பு வாரம் கொண்டாடுக

ஏகாதிபத்தியக் காலனி அடிமைத்தனத்தை எதிர்த்துப் பன்னெடுங் காலமாக வீரமிக்கப் போராட்டங்கள் நடத்தி சமீபத்தில் விடுதலை பெற்று, ஐக்கிய நாடுகளின் அணியில் சேர்ந்துள்ள சகல ஆப்ரிக்க நாடுகளையும் இம்மகாநாடு உளமகிழ்ந்து வரவேற்று வாழ்த்துக் கூறுகின்றது.

விடுதலை பெற்ற இந்நாடுகளை மாஜி காலனி அடிமை எஜமானர்கள் என்றென்றும் தம் கைப்பாவைகளாக வைத்திருக்கப் பகிரத முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதனையே காங்கோ சம்பவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. இதற்காக ஏகாதிபத்தியவாதிகள் ஐ. நா. ஸ்தாபனத்தையும் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை.

எனவே இன்று விடுதலை அடைந்துள்ள நாடுகளுக்கு ஐ. நா. உண்மையான பாதுகாவலனாகத் திகழும் வண்ணம் தக்க மாற்றங்கள் செய்யப்படுவதுடன், இன்னும் விடுதலைபெறாத சகல நாடுகளுக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்ற பிரகடனத்தை ஐ. நா. ஏற்க வேண்டுமென்று சோவியத் யூனியன் கொண்டு வந்துள்ள தீர்மானம் மிகப் பெரும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்தியப் பிரதமர் நேரு இத்தகையதொரு பிரகடனம் அவசியம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனவே ஆசிய—ஆப்ரிக்க நாடுகளின் புதிய சுதந்திர அந்தஸ்தை முழுதுமாகப் பிரதிபலிக்கும் விதத்தில் ஐக்கிய நாடு சபை திருத்தி அமைக்கப்படுவதுடன் இன்னும் விடுதலை அடையாத

நாடுகளுக்கு சீக்கிரமே சுதந்திரமளிக்கப்படவேண்டும் என்ற பிரகடனத்தை ஐ. நா. துரிதமாக ஏற்கும்படி செய்ய இந்திய மக்கள் தம் வலிமைமிக்க குரலை எழுப்ப வேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

ஆயுத ஒழிப்பு

மனிதகுலம் ஆவலுடன் எதிர்பார்க்கும் உலக சமாதானத்தை உத்திரவாதம் செய்யவும், கெடுபிடி நிலையைத் தளர்த்தவும் பூர்ண மான ஆயுதப்பரிஹரணம் என்ற விஷயமே கேந்திரமானது. இவ் விஷயத்தில் சுமூகத் தீர்வு காண்பது, ஒவ்வொரு நாடும் தன் தன் வழியில் முன்னேற்றம் காண முயற்சிகள் எடுக்க உதவும் சூழ்நிலையை சிருஷ்டிக்கும். கடந்த பல வருடங்களாகவே இந்த முயற்சிக்குக் குறுக்கே நின்றுவரும் மேற்கத்திய வல்லரசுகள், இவ்விஷயம் பரிசீலனைக்கு வரும்பொழுதெல்லாம் ஆயுதப் பரிஹரணத்திற்கு பதிலாக கண்காணிப்பு என்பதை எதிரும்புதிரு மாக முன்வைத்து குழப்படிசெய்து முட்டுக்கட்டைப்போட்டு வந்துள்ளன.

இங்கிலையில் இந்தியாவின் பிரதம மந்திரி பண்டிட் ஜவஹர் லால் நேரு அவர்கள் இவ்விஷயம் குறித்து சமீபத்தில் தந்துள்ள விளக்கத்தை இம்மகாநாடு வரவேற்கிறது. ஆயுதப்பரிஹரணம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டு, அதை அமுலாக்க சர்வதேசக் கண்காணிப்பு என்பதும் இருக்கவேண்டும் என்றும், இவை இரண் டும் ஒன்றுடன் மற்றொன்று இணைந்துள்ளவைதானே அன்றி, எதிரும் புதிருமானவை என்று கருத இடமேயில்லை என்று தெளி வாக்கியுள்ளார். இதுவே தொடர்ச்சியாக கடந்த சில வருடங் களாகவே, சோஷலிஸ நாடுகளும் முக்கியமாக சோவியத் யூனிய னும் எடுத்து வந்துள்ள நிலையும் ஆகும்.

இன்று துரிதமாக உலக சமாதானத்திற்குச் சாதகமாக மாறி வரும் சூழ்நிலையில், சர்வதேசக் கண்காணிப்புடன்கூடிய பூர்ண ஆயு தப்பரிஹரணம் என்பதை அமுலாக்க, சமாதானத்தில் அக்கறை கொண்டுள்ள மக்கள் அனைவரும் ஏகோபித்து முயல்வது அவசியம் என்று இம்மகாநாடு கருதுகிறது. இந்த மகோன்னத லட்சியத்தை அடைய மேற்கத்திய வல்லரசுகளின் முட்டுக்கட்டையை முறிக்க தீவிரமான விரிவான முயற்சிகளை உடனடி மேற்கொள்வதவசியம் என்றும் இம்மகாநாடு கருதுகிறது.

இதற்காக வருகிற நவம்பர் 1-ந்தேதி முதல் 7-ந் தேதிவரை உள்ள வாரத்தை சமீப 15-வது ஐ. நா. நடவடிக்கைகளை விளக் கும் அடிப்படையில், ஆயுத ஒழிப்பு வாரமாகக் கொண்டாட

வேண்டும் என்று கட்சியின் சகல மட்டத்திலுள்ள கமிட்டிகளையும் யூனிட்டுகளையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

விலைவாசி உயர்வுக்கு கண்டனம்

உணவுப் பொருள்கள் மற்றும் மக்களின் அன்றாட உபயோகப் பண்டங்கள் ஆகியவற்றின் விலைவாசி ஏறிக்கொண்டேயிருப் பதைக் கண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாகாண 6-வது மகாநாடு ஆழ்ந்த கவலை கொள்ளுகிறது.

இந்த விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இரண்டாவது 5-ஆண்டு திட்டத்தில் போடப்பட்ட பல திட்டங்கள் கைவிடப் பட்டன. இன்னும் பல திட்டங்களை ஒத்திப்போடவேண்டி வந் தது. மேலும் பல திட்டங்கள் அரைகுறையாக நிறைவேற்றப் பட்டு மூன்றாவது திட்டத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டி வந் தது. இதனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வெகுவாக தடைப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க, மக்களின் உழைப்பினால் விவசாய, தொழில் உற்பத்தி பெருகி உள்ளது. இதன் விளைவாக நம் நாட் டின் தேசிய வருமானம் கடந்த பத்தாண்டுகளில் 25 சதம் அதி கரித்துள்ளது.

ஆயினும் சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரத்தில், எவ்வித அபிவிருத்தியும் ஏற்படவில்லை. மாறாக, விலைவாசி ஏற்றத்தின் விளைவாக, தொழிலாளிகள், விவசாயிகள், சிறு நடுத்தர மக்கள் ஆகிய நாட்டின் மிகப் பெரும்பான்மையான மக்களின் உண்மை வருமானமும், வாங்கும் சக்தியும் குறைந்துகொண்டே வந்துள்ளது.

எனவே, இந்த விலைவாசி உயர்வு, நாட்டின் செல்வத்தை சாதாரண மக்களின் கையிலிருந்து பிடுங்கி சில செளகரியக்காரர் களின் கையில் குவிப்பதற்கான கருவியாகவே உபயோகிக்கப்பட் டுள்ளது.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலும் விலைவாசிகளைக் கட்டுப் படுத்துவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைக்கு எவ்வித உத் தரவாதமும் இல்லை. அதற்கு மாறாக, விலைவாசிகள் ஏறும் என் பதற்கான அறிகுறிகளே உள்ளன. ஏனெனில் விலைவாசிகள் ஏறும் என்று நகல் திட்டம் ஏற்றுக்கொண்டபோதிலும், அவை உயராமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது பற்றி ஆராயப்படவேண்டும் என்றுதான் அது கூறுகிறது.

ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் மக் களின் வாழ்க்கைத்தரம் குறையும் என்பதும், நாட்டின் செல்வம் சில வசதிக்காரர்களிடத்தில் மேலும் குவியும் என்பதும் உறுதி.

இந்த நிலைமைக்கு காரணம் சர்க்காரின் கொள்கைகள்தான் என்று இம்மகாநாடு உறுதியாகக் கருதுகிறது. பெருநிலச்சொந்தக் காரர்கள், வர்த்தகச் சூதாட்டக்காரர்கள் முதலானோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மறுப்பதுடன், அவர்களை மேலும் கொழுக்க வைக்கும் கொள்கையை சர்க்கார் கடைப்பிடிப்பதின் விளைவே இந்த நிலைமைக்கு காரணம் ஆகும். இதன் காரணமாக முதல் இரண்டு திட்டங்களில் முறையே 450 கோடி ரூபாய், 500 கோடி ரூபாய் உணவுதான்ய இறக்குமதிக்காக அன்னியச் செலாவணி யைச் செலவு செய்ததோடு நில்லாமல், மூன்ருவது திட்ட காலத் திலும் உணவுதான்ய இறக்குமதிக்காக அந்நிய நாட்டு செலா வணி 600 கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது. அயல்நாட் டுச் செலாவணி இருப்பு குறைந்துள்ளதற்கு இது முக்கியமான தோர் காரணமாகும். தொழில் வளர்ச்சிக்காக அன்னியச் செலா வணியை செலவழிப்பதற்கு இது குறுக்கே நிற்கிறது. தொழில் முன்னேற்றத்திற்கு இது தடையாக விளங்குகிறது.

எனவே, சர்க்காரின் இக்கொள்கையை மாற்றி, விலைவாசி களைக் கட்டுப்படுத்தி உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையில் போதுமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கத்தை வற் புறுத்த ஒன்றுபட்டு கிளர்ச்சி செய்யும்படி இம்மகாநாடு மக்களை அறைகூவி அழைக்கிறது.

மூன்ருவது திட்டத்தில் தமிழகத்திற்கு கேந்திரமான தொழில்கள் தேவை

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்காகத் திட்டமிட்ட ஆராய்ச்சி நடத்தி இயற்கை வளம் பூராவையும் பயன் படுத்தித் தொழில்களைவளர்க்கப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லை என இம்மகாநாடு கருதுகிறது.

சேலத்தில் கிடைக்கும் இரும்பைப் பயன்படுத்தி உருக்குச் தொழிற்சாலை ஒன்று நிறுவுவது சாத்தியம் என்பது நிரூபிக்கப் பட்டுவிட்டது.

சேது சமுத்திரம் தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் முற்றி லும் சாத்தியம் என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே நியமிக்கப் பட்ட ராமசாமி முதலியார் கமிட்டி திட்டவட்டமாகக் கூறி விட் டது. எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை தமிழ் நாட்டில் நிறுவுவதும் சாத்தியம்.

தமிழ் நாட்டில் மின்சார உற்பத்திக்குள்ள வசதிகள் பூராவும் உபயோகப்படுத்தப் பட்டு விட்டமையால் வளரும் தேவை

யைப் பூர்த்தி செய்வதற்கு அணுசக்தி மின்சார நிலயம் மூலமே முடியும்.

தமிழ் நாட்டில் உள்ள நதிகளை எல்லாம் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தியாய் விட்டதனால், மேலும் நீர்ப்பாசனவசதிகளுக்கு அண்டை ராஜ்யங்களோடு கலந்து பேசுவது அவசியப்படுகிறது.

இந்தக் கோரிக்கைகளை நீண்ட நெடுங்காலமாக தமிழ் மக்கள் அரசாங்கத்தின்முன் வைத்துள்ளனர். என்ற போதிலும் இவை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகலில் சேர்க்கப்படாதது கண்டு இம்மகாநாடு வருந்துகிறது. சென்ற சட்டசபைக் கூட்டத்திலும் இந்தத் திட்டங்களை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதை அனுசரித்து இந்தத் திட்டங்களை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று மத்திய சர்க்காரையும் திட்டக் கமிஷனையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

கன்யாகுமரிக்கு ரயில்பாதை

இந்தியாவின் தென்கோடியாகிய கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது ஒரு இஞ்சுகூட ரயில் பாதையில்லை. நெல்லையிலிருந்து கன்னியாகுமரி வழியாக திருவனந்தபுரம் வரையில் ரயில் பாதை போடவேண்டுமென்பது இந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் குமரி—நெல்லை ரயில் இணைப்பை உட்படுத்தி அமுலாக்க வேண்டுமென இம்மகாநாடு மத்திய-மாகாண அரசாங்கங்களைக் கேட்டுக்கொள்கிறது.

மத்திய சர்க்கார் ஊழியர்கள் மீது வஞ்சம் தீர்க்காதீர்

இவ்வருடம் ஜூலை மாதம் 12-ந் தேதி முதல் 17-ந் தேதி வரை நடைபெற்ற மத்திய அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தம் இன்றைய சர்க்காரின் நடைமுறைக் கொள்கைகளின் பாதகமான பொருளாதாரத்தின் விளைவுகளை மக்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. விலைவாசி உயர்வும் ஊதியக் குறைவும் பாட்டாளி மக்களைப் பாதிக்கும் பெரும் பிரச்சினைகள் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது.

ஆத்திரமடைந்த அரசாங்கம் 16 ஆயிரம் ஊழியர்களைக் கைது செய்தது. துப்பாக்கிப் பிரயோகத்தில் நால்வர் உயிர் நீத்

தனர். மத்திய ஊழியர்கள் சங்கத்தின் அங்கீகாரம் ரத்துச் செய்யப்பட்டது. நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பெரும் நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளனர்.

அத்தியாவசிய சர்வீசுகளில் வேலை நிறுத்தங்களைத் தடை செய்யவும், சர்க்கார் ஊழியர்கள் யூனியன்களில் அயலார் சம்பந்தப்படுவதைத் தடை செய்யவும் சட்டங்கள் கொண்டுவரப்போவதாக அரசாங்கம் பயமுறுத்துகிறது.

மேலும் சென்னை சர்க்கிளைச் சேர்ந்த தமிழ் நாட்டில்தான் தபால்-தந்தி, ஆடிட் ஆபீஸ், ரயில்வே, விமான நிலையம் முதலிய பகுதிகளில் வேலை செய்வோர் மற்ற மாகாணங்களைவிட அதிகமாகப் பழிவாங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

எனவே, சர்க்காரின் இக்கொள்கையை மாற்றி, சங்கங்களுக்கு அங்கீகாரத்தைத் திருப்பிக் கொடுக்கவும், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பழிவாங்கப்பட்டார்களைத் திரும்ப வேலைக்கு எடுக்கவும், தண்டனைகளை ரத்து செய்யவும், கேசுகளை வாபஸ் வாங்கவும் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டுமென்று இம்மகாநாடு தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறது.

சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு எனப் பெயரிடுக!

சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்ட வேண்டுமென்ற கோரிக்கை, நெடுகலும், கருத்து வேறுபாடு கட்சி வேறுபாடுகளைக் கடந்த தமிழ்ப் பெருமக்களின் தேசியப் பொதுக் கோரிக்கையென்று இம்மகாநாடு கருதுகிறது.

இத்தகைய பொதுக் கோரிக்கைக்கு இதுவரை மாநில அரசாங்கம் இணங்காத வருந்தத் தக்க நிலைமையை மாற்ற தமிழ் மக்களின் தொடர்ச்சியான ஒன்றுபட்ட கிளர்ச்சி ஒன்றுதான் இன்றையச் சூழ்நிலையில் ஒரே வழி என்று இம்மகாநாடு ஆழமாக உணருகிறது.

இந்த உணர்வைத் தமிழ் மக்களிடம் மேலும் கூர்மையாக்க முதல் நடவடிக்கையாக மா. க. நிர்ணயிக்கும் ஒரு நாளை 'தமிழ் நாடு' நாளாக மிக விரிந்த அளவில் தமிழகம் எங்கும் கொண்டாடும் முயற்சியில் கட்சியின் சகல கிளைகளும் கட்சிச் சார்புடைய எல்லா நிறுவனங்களும் முழுமூச்சுடன் பங்குகொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு பணிக்கிறது.

'தமிழ்நாடு' என்று பெயர்சூட்டும் இந்தப் பொதுக் கிளர்ச்சியில் எல்லாக் கட்சியினரும், கருத்தோட்டக்காரர்களும், பொதுவாகத் தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் ஒன்றுபட்ட உணர்ச்சியுடன் வெற்றிபெறும் வரையில் தொடர்ந்து பங்குகொள்ள வேண்டுமென்று இம்மகாநாடு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்குக!

ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகும், நிர்வாகத்தின் எல்லாத் துறைகளிலும் நீதிமன்றத்திலும் தமிழ் மொழியை விரைவாக ஏற்றுக்கொள்வதில் காட்டும் தயக்கத்தை அரசாங்கம் கைவிட வேண்டுமென்று இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

இந்தியக் குடியரசு மொழி ஆங்கிலமா ஹிந்தியா என்ற முறையில் பிரச்சினையைக் கிளப்பிவிட்டு, தமிழுக்கு முதலிடம் அளிக்க வேண்டியதை மறைத்து மறுத்து தமிழ் மொழியின் தயக்கமற்ற சுணக்கமற்ற வளர்ச்சிக்கு ஊறுவிளைக்கும் சூழ்ச்சிகளை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இத்தகைய சூழ்ச்சிகளை தமிழ் மக்கள் விழிப்புடன் முறியடித்துத் தீரவேண்டும் என்றும் அறிவுறுத்துகிறது.

கல்லூரி மட்டத்திலும் தமிழ் மொழியே பயிற்சி மொழி என்ற நிலைமை அவசர அவசியமாக நடப்பில்வரும் பொருட்டு, கட்சியின் சகல சக்திகளையும் திரட்டி, தமிழ் மக்களுக்குப் பணிபுரிய இம்மகாநாடு உறுதிகொள்கிறது.

தமிழில் போதிய விஞ்ஞான தொழில் நுணுக்க, கலைச் சொற்களைக் காணவும், நூற்களை ஆக்கவும் உடனடியாக முன்வர வேண்டுமென்று தமிழறிவோடு நவீன மொழி அறிவுமிக்க அறிஞர்களை இம்மகாநாடு வினயமாக வேண்டிக்கொள்கிறது. தமிழுலகம் தழுவிய இந்த மகத்தான ஜனநாயகப் பிரச்சினைக்குப் பேராதரவு அளிக்கவேண்டுமென்று இம்மகாநாடு தமிழ்ப் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்க!

நீண்டகாலமாக சிறையில் இருக்கும் கம்யூனிஸ்ட் அரசியல் கைதிகளை சென்னை சர்க்கார் இன்னும் விடுதலை செய்யாமலிருப்பதைக் கண்டு இம்மகாநாடு வருந்துகிறது.

நீண்டகால தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்குப் பொருந்தக் கூடிய சிறை விதிகளின்படி பார்த்தாலும்கூட, நீண்டகாலமாக சிறையில் இருக்கும் கம்யூனிஸ்ட் அரசியல் கைதிகளில் பலர் இதற்குள் விடுதலை செய்யப்பட்டிருக்கவேண்டும். அரசியல் விரோத குரோதங்களின் காரணமாக, சென்னை சர்க்கார் இவர்களை இன்னும் விடுதலை செய்யாமலிருப்பதை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசியல் பாரபட்சமற்ற முறையில் இப்பிரச்சினையைப் பரிசீலனை செய்து இவர்களை விடுதலை செய்யும்படி இம்மகாநாடு சென்னை சர்க்காரை வற்புறுத்துகிறது.

இந்தத் தோழர்களை விடுதலை செய்யவேண்டுமென்று கோரி, 1960 நவம்பர் 27-ல் தமிழ் நாடு முழுவதிலும் விரிவான முறையில் பொதுக்கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தி, அத்தினத்தை அரசியல் கைதிகள் விடுதலை தினமாகக் கொண்டாடும்படி கட்சியின் எல்லாக் கமிட்டிகளையும் கிளைகளையும் இம்மகாநாடு பணிக்கிறது.

புதுவை சட்டபூர்வ இணைப்பை தாமதமின்றி அமுல் நடத்துக

புதுவை ராஜ்யம் இந்திய யூனியனுடன் சட்டபூர்வமாக இணைவதற்கான நகல் ஒப்பந்தம் இந்திய-பிரெஞ்சு சர்க்கார்களுக்கிடையே ஏற்பட்டு 4 வருடங்களுக்கு மேலாகியும், அவ்வொப்பந்தத்தை பிரெஞ்சு சர்க்கார் அங்கீகாரம் செய்யாமல் காலம் கடத்துகிறார்கள். இப்பிரதேசத்தின் மீது தமது சட்டபூர்வமான உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் போக்கில் இப்பிரதேசத்தின் நீதி-நிர்வாக மேலதிகாரத்தை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள். புதுவை ராஜ்ய இந்தியப் பிரஜைகள் மட்டுமின்றி இந்திய சர்க்காரும்கூட பல விஷயங்களில் பாரீஸ் கோர்ட்டுகளில் நீதிக்குக் கையேந்தி நிற்கும் நிலை ஏற்படுகிறது.

இதன் விளைவாய் இந்திய அரசின்—இந்திய நாட்டின், தேசீய தன்மானமும் பாதிக்கப்படுகிறது. இத்துடன், பிரெஞ்சு ஏகாதிபத்திய ஜனநாயக விரோத பிரஜா உரிமை-மறுப்பு, தொழிலாளர் விரோதச் சட்டங்களும் பிற்போக்கான சிவில் கிரிமினல் சட்டங்களும் புதுவை ராஜ்ய மக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி வருகின்றன. இந்திய யூனியனில் புதுவை ராஜ்ய மக்கள் இணைந்து 6 வருடங்களாகியும், இன்றுவரை இந்திய மக்கள் போராடிப் பெற்ற ஜனநாயக உரிமைகளும், சட்டங்களும் புதுவை ராஜ்ய மக்களுக்கு அமுலாக்கப்படாமல் இருந்து வருகிறது.

இதனுல் புதுவை ராஜ்ய மக்களுக்கு ஏற்படும் ஆசாபங்கங்களைப் பயன்படுத்தும் ஏகாதிபத்திய ஆதரவு சக்திகள், தம் தேச விரோதப் பிரசாரத்தை தொடர்ந்து நடத்துகின்றன. புதுவை மக்களிடையே சிற்சிலர் மறைமுகமாக, அல்ஜீரிய யுத்தத்தில் பிரெஞ்சு ஏகாதிபத்தியப் படையில், சேர்ந்து வரும் நிலையும் இருக்கிறது.

இந்தச் சூழ்நிலைமையில் புதுவை ராஜ்ய மந்திரிசபை சட்ட பூர்வ இணைப்பிற்கு ஏற்படும் கால தாமதம் போக்கடிக்கப்பட வேண்டும் என்றும், இனி சட்டப்படி புதுவை ராஜ்யம் இந்திய யூனியன் பகுதியே என்றும் ஏகமனதாக பிரகடனம் செய்துள்ளதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கமிட்டியின் 6-வது மாநாடு வரவேற்கின்றது.

புதுவை ராஜ்ய மக்களின் பிரதிநிதி சபை ஏகமனதாகச் செய்துள்ள மேற்சொன்ன பிரகடனத்தை அந்நிய சர்க்கார் கவனத்தில் வைத்து, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் காலம் கடத்தும் நடவடிக்கைகளைக் கண்டு கவலைப்படாமல் புதுவை ராஜ்யத்தை இந்தியப் பிரதேசமாக சட்டப்படி ஏற்றுக்கொள்ளவேண்டும். புதுவை ராஜ்ய மக்களுக்கு இந்தியப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும். இந்திய அரசியல் சட்டத்தை புதுவைராஜ்யத்துக்கு விஸ்தரிக்க வேண்டும். பிரெஞ்சுக் காலனித் தொழிற் சட்டம், சிவில் சட்டம், கிரிமினல் சட்டம். நீதி நிர்வாக முறை அனைத்தையும் ரத்து செய்து சகல இந்தியச் சட்டங்களையும், நீதி நிர்வாக முறைகளையும் புதுச்சேரிக்கு விஸ்தரிக்க வேண்டும் என்ற புதுவை ராஜ்ய மக்களின் கோரிக்கைகளை இம் மாநாடு முழுமனதுடன் ஆதரிக்கிறது. இக்கோரிக்கைகளை இந்திய சர்க்கார் உடனடியாக ஏற்று அமுல்படுத்தவேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்துகிறது. புதுவை ராஜ்ய மக்களின் இக்கோரிக்கைகளை இந்திய சர்க்கார் ஏற்கவேண்டும் என்று தமிழகத்தில் உள்ள சகல கட்சிகளும், வெகுஜனங்களும் ஒன்றுபட்டு வற்புறுத்த முன் வர வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

★

III

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கவுன்சில் உறுப்பினர்கள்

1. எம். ஆர். வெங்கட்ராமன்
2. பி. ராமமூர்த்தி
3. ப. ஜீவானந்தம்
4. பி. சீனிவாசராவ்
5. மணலி, சி. கந்தசாமி
6. எம். கலியாணசுந்தரம்
7. என். சங்கரய்யா
8. வி. பி. சிந்தன்
9. கே. முத்தய்யா
10. டி. ஆர். கணேசன்
11. கே. எம். சுந்தரம்
12. எஸ். கிருஷ்ணசாமி
13. கே. ராமநாதன்
14. வி. ராதாகிருஷ்ணன்
15. முகவை, ராஜமாணிக்கம்
16. ஆர். கணேசன்
17. கே. அனந்தன் நம்பியார்
18. எம். கே. ரங்கநாதன்
19. பார்வதி கிருஷ்ணன்
20. ஏ. எஸ். கே. அய்யங்கார்
21. கே. கஜபதி
22. கே. முருகேசன்
23. மோகன் குமாரமங்கலம்
24. பி. என். பி. கபூர்
25. எஸ். சி. கிருஷ்ணன்
36. கே. எஸ். பார்த்தசாரதி
27. சி. கே. மாணிக்கம்
28. ஆர். ராஜரத்தினம்
29. வி. கே. கோதண்டராமன்
30. கே. ஆர். சுந்தரம்
31. பி. ஜயராமன்
32. பி. புருஷோத்தமன்
33. எஸ். நடராஜன்
34. ஆர். முருகேசன்
35. எம். காத்தமுத்து
36. ஏ. கே. சுப்பையா
37. வி. ராமசாமி
38. கே. ஆர். ஞானசம்பந்தம்
39. கே. வி. பாரதிமோகன்
40. எம். மாசிலாமணி
41. டி. ஆறுமுகம்
42. ஜி. பக்தவத்சலம்
43. பி. எஸ். தனுஷ்கோடி
44. ஜி. வீரய்யன்
45. ஆர். உமாநாத்
46. எஸ். ராமசாமி
47. கே. டி. ராஜு
48. பாப்பா
49. எம். ஞானம்
50. சோமு
51. ஆர். கருப்பையா
52. கே. ரங்கசாமி
53. ஆர். எச். நாதன்
54. எம். வி. சுந்தரம்
55. எஸ். நாராயணன்
56. ஏ. சீனிவாசன்
57. எஸ். அழகிரிசாமி
58. எம். ஆதிமூலம்
59. எஸ். ஷண்முகம்
60. எஸ். உலகநாதன்

61. அலக்
62. பி. மாணிக்கம்
63. ஏ. நல்லசிவன்
64. எஸ். ஏ. முருகானந்தம்
65. ஆர். நல்லகண்ணு
66. டி. ஆர். சுப்பிரமணியம்
67. எம். காமாட்சி
68. ஜி. எஸ். மணி
69. எம். எம். அலி
70. வி. சுப்பையா
71. டி. கே. ராமானுஜம்
72. ஆர். எம். கிளமன்சோ
73. ஜி. சாமுவேல்
74. கே. செல்லப்பன்
75. ஏ. முனுசாமி
76. எஸ். எம். ராமய்யா
77. பி. விருத்தகிரி
78. எம். ரத்தினம்
79. கே. டி. கே. தங்கமணி
80. ஏ. பாலசுப்பிரமணியம்
81. ஆர். ராமராஜ்
82. ஏ. பி. பழனிசாமி
83. வி. கார்மேகம்
84. கே. பி. ஜானகி
85. அப்துல்வகாப்
86. என். வரதராஜன்
87. எஸ். ஏ. தங்கராஜன்
88. வி. மதனகோபால்
89. இரா. கோவிந்தன்
90. வி. ஏ. கருப்புசாமி
91. என். கிருஷ்ணசாமி
92. எஸ். குருசாமி
93. என். கே. கிருஷ்ணன்
94. கே. ரமணி
95. கே. என். சின்னய்யன்
96. எல். அப்பு
97. பி. நாராயணன்
98. எம். பூபதி
99. தங்கவேல்
100. வெள்ளிங்கிரி
101. ஏ. கணபதி

தமிழ்நாடு கண்டிரோல் கமிஷன் உறுப்பினர்கள்

1. எம். ரத்தினம்
2. பி. கே. ராமசாமி
3. எஸ். பாலவிநாயகம்
4. என். கிருஷ்ணசாமி
5. கே. எஸ். பார்த்தசாரதி

தமிழ்நாடு கவுன்சில் நிர்வாகக்குழு

1. எம். ஆர். வெங்கட்ராமன்
2. பி. ராமமூர்த்தி
3. ப. ஜீவானந்தம்
4. பி. சீனிவாசராவ்
5. வி. பி. சிந்தன்
6. என். சங்கரய்யா
7. மணலி கந்தசாமி
8. எம். கலியாணசுந்தரம்

9. பி. மாணிக்கம்
10. ஏ. பாலசுப்ரமணியம்
11. கே. ரமணி
12. எம். காத்தமுத்து
13. வி. சுப்பையா
14. ஏ.எஸ்.கே. அய்யங்கார்
15. கே. டி. கே. தங்கமணி
16. என். கே. கிருஷ்ணன்
17. டி. ஆர். கணேசன்
18. ஜி. எஸ். மணி
19. ஆர். எச் நாதன்
20. ஏ. கே. சுப்பையா
21. பி. ஜெயராமன்
22. ஆர். உமாநாத்
23. கே. டி. ராஜு
24. ஜி. சாமுவேல்
25. கே. முத்தையா

தமிழ்நாடு கவுன்சில் செயற்குழு

1. எம். ஆர். வெங்கட்ராமன்
2. பி. ராமமூர்த்தி
3. பி. சீனிவாசராவ்
4. ப. ஜீவானந்தம்
5. எம். கலியாணசுந்தரம்
6. மணலி கந்தசாமி
7. என். சங்கரய்யா
8. வி. பி. சிந்தன்
9. ஏ. பாலசுப்பிரமணியம்

தமிழ்நாடு கவுன்சில் செயலாளர்

எம். ஆர். வெங்கட்ராமன்



ஜனசக்தி பிரஸ், சென்னை 1.